www.agaram.lk

0231

OL/2015/11-T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

11 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

| | | |
|---|---|---|
| බුද්ධ ධර්මය | I, II | පැය තුනයි |
| பௌத்தம் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Buddhism | I, II | Three hours |

## பௌத்தம் I

**கவனிக்க :**

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** "மனித வர்க்கம் எனும் மரத்தில் நீண்டதொரு கால இடைவெளியின் பின்னர் மலர்ந்ததும், மலர்ந்த பின் ஞானமெனும் நறுமணத்தினாலும் கருணையெனும் மகரந்தத்தினாலும் உலகை நிரப்பியதுமான அசாதாரண மலர் புத்தராவார்" இவ்வாறு கூறியவர்,

(1) எச்.ஜி. வெல்ஸ் (2) ஜவஹர்லால் நேரு
(3) பண்டிதர் றீஸ் டேவிட்ஸ் (4) சேர். எட்வின் ஆர்னோல்ட்

**2.** சுத்தோதன மன்னர் தனது மகனான சித்தார்த்த இளவரசனை முதன் முறையாக வணங்கியது,

(1) அசித முனிவர் வணங்கிய போது
(2) இளவரசர் ஆனாபானாஸதி பாவனா மேற்கொண்டபோது
(3) கொண்டஞ்ஞ பிராமணர் அவரை வணங்கியபோது
(4) பண்டித பிராமணர்கள் இளவரசருக்கு பெயர் சூட்ட வந்தபோது

**3.** சித்தார்த்த இளவரசன் துறவு பூண்டு தபசிக் கோலத்தில் உண்மையைத் தேடிச் சென்ற பயணத்தில் முதலில் போனது

(1) காலதேவல, ஆலாரகாலாம தபசிகளிடம் (2) அஸித, உத்தகராமபுத்த தபசிகளிடம்
(3) ஆலாரகாலாம, உத்தகராமபுத்த தபசிகளிடம் (4) ஐந்து தபசிகளைக் கொண்ட கூட்டத்திடம்

**4.** கிருஹஸ்தனே! நீ மும்மணிகளை சரண் புகுந்திருந்தாலும் உங்கள் வீட்டில் ஜைன துறவிகளுக்கு வழங்கிய தானத்தைக் கொடுத்தபடியே கொடு." புத்தர் இவ்வாறு கூறியது யாரிடம்?

(1) அபயராஜ குமாரருக்கு (2) உபாலி கிருஹஸ்தருக்கு
(3) பிம்பிசார அரசனுக்கு (4) சித்த எனும் கிருஹஸ்தனுக்கு

**5.** ஒரு வெஸக் பூரண தினத்தன்று தபசியான சித்தார்த்தர் குசப்புல் கட்டுகள் எட்டினாலான இருக்கையில் அமர்ந்திருந்த போது ஞானம் பெற்றார். இந்த குச புல்லை வழங்கியவர்,

(1) உபக எனும் பெயருடைய பிராமணர் (2) ஸோத்திய எனும் பெயருடைய பிராமணர்
(3) ஹுஹுங்க எனும் பெயருடைய பிராமணர் (4) சங்கீ எனும் பெயருடைய பிராமணர்

**6.** புத்தர் ஞானம் பெற்றபின் ஐந்தாவது வாரத்தைக் கழித்தது,

(1) போதி மரத்தடியில் (2) அஜபால அரச மரத்தடியில்
(3) முசலிந்த பாம்பரசனின் நிழலில் (4) ராஜாயதன அரச மரத்தடியில்

**7.** புத்தருக்கு முதன் முதலில் தானம் வழங்கியவர் யார்?

(1) சுஜாதா எனும் செட்டியின் மகள் (2) அஜாசத்த அரசன்
(3) தபஸ்ஸு - பல்லுக ஆகிய இருவர் (4) சுந்த எனும் தொழிலாளியின் மகன்

**8.** சோவான் பக்குவத்தை அடைந்திருந்த ஐந்து பிக்குகள் குழு (பஞ்சவக்கிய பிக்கு) எதனைக் கேட்டு அரஹத்த நிலையை அடைந்தனர்?

(1) தம்மவக்க பவத்தன சூத்திரத்தை (2) ஆதித்த பரியாய சூத்திரத்தை
(3) அனத்தலக்ண சூத்திரத்தை (4) சச்ச விபங்க சூத்திரத்தை

[பக். 2 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**9.** புத்தர் போதித்தவற்றுக்கிணங்க மற்றவர்களின் சுகங்களில் பொறாமை **கொள்ளாதிருப்பவன்,**
(1) நோயற்றவனாவான் (2) செல்வந்தனாவான் (3) பண்புடையவனாவான் (4) அறிவுடையவனாவான்

**10.** பிப்பலி எனும் பெயருடைய இளைஞர் புத்தபிக்குவாகி சாசனத்திற்கும் அது சம்பந்தமாகவும் பெரும் பணியாற்றினார். அவரது துறவுப் பெயரானது,
(1) மகா கஸ்ஸப தேரர் (2) மகா கச்சாயன தேரர்
(3) மகா பன்தக தேரர் (4) மகா மொக்கல்லான தேரர்

**11.** விசாகா எனும் மகா உபாசிகையும் செட்டி அநாதபிண்டிக என்பவரும் புத்தருக்கு வழங்கிய இரண்டு மடாலயங்களை முறையே காட்டும் வரியைத் தெரிவுசெய்க.
(1) வேலுவனாராம, பூர்வாராம (2) ஜேதவனாராம, வேலுவனாராம
(3) பூர்வாராம, கோஷிதாராம (4) பூர்வாராம, ஜேதவனாராம

**12.** கௌதம புத்தர் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அவரது இறுதி சிஷ்யராகக் கருதப்பட்டவர்,
(1) தர்மாராம தேர (2) அனுருத்த தேர (3) ஸுபத்த தேர (4) கிம்பில தேர

**13.** பிராமணரே, உங்கள் வீட்டிற்கு வரும் அதிதிகளுக்கென தயாரிக்கப்பட்ட உணவை அவர்கள் ஏற்காவிட்டால் அது உமக்கு ஆகும் என்பது போல உமது விருந்தினை ஏற்காமையால் அது மீண்டும் உமக்குரியதே" புத்தர் இவ்வாறு யாருக்குக் கூறினார்?
(1) கஸீபாரத்வாஜ பிராமணருக்கு (2) அக்கோஸ பாரத்வாஜ பிராமணருக்கு
(3) ஸோணதண்ட பிராமணருக்கு (4) வச்சகொத்த பிராமணருக்கு

**14.** பேரவா, பெருமை, தவறான நோக்கு முதலியன இல்லாத அன்பு, தகைமை போன்றவற்றோடு நிறைவேற்றப்படும் கொடை முதலான புண்ணிய செயற்பாடுகள் இவ்வாறு அழைக்கப்படும்.
(1) பாரமிதா தர்ம (2) ராஜ தர்ம (3) லோகாதிபதி தர்ம (4) அத்துபனாயிக தர்ம

**15.** தமது வாழ்க்கையையும் தியாகம் செய்து (பாரமித தர்ம) மிகவும் நிறைவான தர்மத்தை செய்வதை இவ்வாறு அழைப்பர்.
(1) பாரமீ (2) உப பாரமீ (3) பரமத்வ பாரமீ (4) தஸ பாரமீ

**16.** போதி சத்துவரின் நெக்கம்ம பாரமீயை நிறைவு செய்தலை வெளிப்படுத்தும் ஜாதகக் கதையாவது,
(1) தேமிய ஜாதக (2) வட்டக ஜாதக (3) மகமானவக்க ஜாதக (4) மகாதேவ ஜாதக

**17.** சங்கரத்ன பண்புகளுள் அதிதிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட உணவாயினும் வழங்கத்தக்கது எனும் பண்பு வெளிப்படுவது,
(1) ஆஹுணெய்ய (2) பாஹுணெய்ய (3) தக்கிணெய்ய (4) அஞ்சலிகரணீய

**18.** தம்மத்தில் குறிப்பிடப்படுவதற்கமைவாக சந்த, தோஸ, பய, மோஹ ஆகியவை என்ன பெயரினால் அழைக்கப்படுகின்றன?
(1) சதர அகதி (பண்பற்ற கதிகள் நான்கு) (2) சதர துகதி (துர்கதிகள் நான்கு)
(3) சதர காமகதி (காம கதிகள் நான்கு) (4) சதர கர்ம கிலேஷ

**19.** "பகைமை கொள்ளும் மனிதர் மத்தியில் நாங்கள் பகைமை பாராட்டாது நன்கு வாழ்வோம்" எனும் கருத்தைக் கொண்ட தம்மபதச் செய்யுளின் முதல் இரண்டு அடிகளுமாவன
(1) "ஸுஸுகங் வத ஜீவாம - வெரிநெஸு அவெரிநொ" என்பது
(2) "ந ஹி வெரென வெரானி - ஸம்மந்தீத குதாசனங்" என்பது
(3) "அத்தனாவ கதங் பாபங் - அத்தனா ஸங்கிலிஸ்ஸதி" என்பது
(4) "ஸரெங் ச ஸாரதொ ஞத்வா - அஸாரங்ச அஸாரதொ" என்பது

**20.** அன்புடைமையை வளர்க்கும் ஒருவரிடம் இருக்கவேண்டிய குணாம்சமானது "அறிவுடைமை" கரணீய மெத்த சூத்திரத்தில் இந்தப் பண்பு அழைக்கப்படுவது,
(1) ஸுவச்சொ என (2) ஸுபரொ என (3) நிபகொ என (4) அனதிமானி என

**21.** நான்கு சங்கிர வஸ்துக்களுக்கு **உரித்தல்லாத** தர்ம கருத்துகளைக் கூறும் தெரிவு
(1) தான (2) சீல (3) பிரிய வசன (4) சமானாத்மதாவய

**22.** புத்தர் மற்றும் எட்டு விடயங்களிலுண்டாகும் சந்தேகம், நம்பிக்கையீனம் என்பன பௌத்தத்தில் அழைக்கப்படுவது,
(1) வ்யாபாத என (2) தீனமித்த என (3) உத்தச்ச குக்குச்ச என (4) விசிகிச்சா என

**23.** பௌத்த போதனைகளில் 'லாப - அலாப' (இலாபம் - நட்டம்) யஸ - அயஸ (புகழ்ச்சி - இகழ்ச்சி) முதலான விடயங்கள் அழைக்கப்படுவது,
(1) லோக பாலக தர்ம எனவாகும் (2) லோகாதிபதி தர்ம எனவாகும்
(3) அஷ்ட லோக தர்ம எனவாகும் (4) அத்தாதிபதி தர்ம எனவாகும்

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**24.** மனம், வாக்கு, காயம் (சித, கய, வசன) ஆகிய மூன்று வாயில்களால் ஆடும் நல்ல, கெட்ட செயல்களுக்குப் பின்புலமான சக்தியை தம்மவில் அழைப்பது,
(1) வேதனா ஸ்கந்த எனும் பெயரினால் (2) சஞ்ஞுதா ஸ்கந்த எனும் பெயரினால்
(3) ஸங்கார ஸ்கந்த எனும் பெயரினால் (4) விஞ்ஞுதாண ஸ்கந்த எனும் பெயரினால்

**25.** தமது விவசாயத்தின் மூலம் கிடைக்கும் அறுவடையின் முதல் பகுதியை ஜய சிரீ மஹா போதி சமிந்துவுக்கு அர்ப்பணித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வது சிங்களவர்களின் வழக்கமாகும். இதனை என்ன பெயர் பொண்டு அழைப்பர்?
(1) கிரி பண்ட பூஜா (2) அக்ரஸ்ய தானம்
(3) அடவிஸி புத்த பூஜா (4) தேவதா பலி தானம்

**26.** "இது உள்ள போது இதுவாகும்; இது இல்லாத போது இதுவல்ல" (இமஸ்மிங் ஸதி இதங் ஹொதி, இமஸ்மிங் அஸதி இதங் ன ஹொதி) எனும் இந்த தர்ம போதனையை பௌத்த மதத்தில் குறிப்பிடுவது,
(1) புப்பேகதஹேது வாதம் என்று (2) அஹேது அப்பச்சயதா வாதம் என்று
(3) படிச்ச ஸமுப்பாத என்று (4) இஸ்ஸரனிம்மாண வாதம் என்று

**27.** பௌத்த காரண காரிய தம்மத்தின்படி "விஞ்ஞான உள்ளபோது பெயர், தோற்றம் என்பன உண்டாகும்" என்று கூறப்படுவது,
(1) "ஸங்கார பச்சயா விஞ்ஞானம்" என்பதில் (2) "விஞ்ஞான பச்சயா நாமரூபம்" என்பதில்
(3) "நாம ரூப பச்சயா ஸவாயதனம்" என்பதில் (4) "தண்ஹா பச்சயா உபாதானம்" என்பதில்

**28.** கர்மம் பற்றிய பௌத்த பகிப்பீட்டிற்கு அமைய மூன்றாவது,
(1) திட்டதம்ம வேதனீய கர்ம (2) உபபஜ்ஜ வேதனீய கர்ம.
(3) அபராபரிய வேதனீய கர்ம (4) அஹோசி கர்ம

**29.** சாதாரண ஒருவர் கையில் கிடைப்பதற்கேற்ப சுகத்தைப் பெறுவதுடன் கடன் தொல்லையின்றி வாழ்தலின் சந்தோஷத்தை இவ்வாறு கூறுவர்,
(1) அத்தீ ஸுக (2) போக ஸுக (3) அணன ஸுக (4) அனவஜ்ஜ ஸுக

**30.** ஒருவர் தர்மத்திற்கமைவாக சம்பாதித்த செல்வத்தை தனது வருமானத்திற்கேற்ப செலவு செய்து மிதமான வாழ்வை நடாத்த பழகியுள்ளான். இவ்வாறு வாழ்தலை குறிப்பிடுவது,
(1) உட்டான ஸம்பதா (2) ஆரக்க ஸம்பதா (3) ஸம ஜீவிகதா (4) கல்யாண மித்ததா

**31.** அசோக மன்னன் அன்னிய நாடுகளுக்கு சயமத்தூதுவர்களை அனுப்பி பணியாற்றியபோது உள் நாட்டில் சேவை புரிந்து கொண்டு அக்கிக்கன்தோபம சூத்திரத்தைப் போதித்தவர்,
(1) மஞ்ஞிம தேரர் (2) ரக்கித தேரர்
(3) மஹா தம்மரக்கித தேரர் (4) யோனக தம்மரக்கித தேரர்

**32.** தஸராஜ தர்மத்தில் விபரிக்கப்படும் விதத்திற்கமைய ஆட்சியாளர் தீவிரமின்றி செயற்படுவதை அழைப்பது,
(1) ருஜு கவ என்று (2) தபஸ என்று (3) அக்ரோத என்று (4) இவசீம என்று

**33.** சிகாலோவாத சூத்திரத்தில் காட்டப்படுவதற்கேற்ப தாய், தந்தையர் தமது பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுள் **அமையாதது** பின்வருவனவற்றுள் எது?
(1) பாவங்களிலிருந்து விலக்குதல்
(2) நல்லவற்றில் ஈடுபடுத்துதல்
(3) பரம்பரைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
(4) ஏற்ற காலத்தில் பரம்பரை சொத்துக்களை உரிமைப்படுத்தல்

**34.** அன்புடைமையினால் ஏற்படும் பயன்களுக்குள் **சேராத** விடயத்தைத் தெரிக.
(1) கெட்ட கனவு காணுதல் (2) கடவுள்களால் காப்பாற்றப்படல்
(3) உள்ளம் விரைவில் அமைதி பெறுதல் (4) நினைவுடனேயே இறந்து போதல்

**35.** முதலாவது பௌத்த மகாசபையின் போது தம்ம வினயத்தை மனப்பாடம் செய்வதன் மூலம் பாதுகாத்துச் செல்வது பிக்கு பரம்பரைக்குப் பொறுப்பளிக்கப்பட்டது. அதில் சாரிபுத்த தேரரின் சிஷ்ய மரபினருக்குப் பொறுப்பளிக்கப்பட்டது,
(1) தீக நிகாய (2) மஜ்ஜிம நிகாய (3) அங்குத்தர நிகாய (4) ஸம்யுக்த நிகாய

**36.** இரண்டாவது பௌத்த மகாசபையின் விளைவுகளுக்குள் **சேராத** விடயம் பின்வருவனவற்றுள் எது?
(1) பொருத்தமற்ற பத்து விடயங்களை ஏற்காது மறுத்தமை
(2) தேரவாத தம்ம விநயத்தை தவறான கருத்துடையோரிடமிருந்து காப்பாற்றுதல்
(3) பிக்குகள் இரண்டு குழுக்களாகப் பிளவுபட்டமை
(4) சாசனத்தை ஒன்பது நாடுகளில் நிறுவியமை

[பக். 4 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**37.** புத்தரின் "புரிஸதம்மஸாரதீ" எனும் பண்பினை விபரிப்பதான புராதன இலங்கையின் சிங்கள மொழியில் ஆக்கப்பட்ட மிகப் பழைமையான உரைநடை ஆக்கத்தினை ஆக்கியவர் யார்?

(1) பண்டிதர் குருலுகோமி
(2) பண்டிதர் வித்யா சக்கரவர்த்தீ
(3) வண. தர்மசேன மஹாதேரர்
(4) வண. புத்த புத்ர மஹா தேரர்

**38.** "காலா ரஸமுஃ போஜன கர பெம்
காலா ஸுஃவந்ததி ஸந்துணுத் மனரம்
லாலா அபரண நிஸி லெஸ ஸரஹுஃம்
பாலா கிய வனி பஹுஃரு கோலம்"

தர்ம முன்னேற்றமில்லாத வாழ்வு பயனற்றது என்பதைக் காட்டும் மேலேயுள்ள கவி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்?

(1) வண. தொட்டகமுவே சிறி ராஹுல தேரரின் காவிய சேகரம்
(2) வண. வீதாகம மைத்ரீ தேரரின் லோவட ஸங்கராவ
(3) வண. ரணஸ்கல்லே தேரரின் லோகோபகார
(4) பண்டிதர் அலகியவன்ன முகவெற்றியின் ஸுஃபாஷித

**39.** "எனது இந்த செயற்பாடுகள் அரச சுகத்தை அனுபவிப்பதற்காகச் செய்யப்படுபனவன்று. இவை புத்தசாஸன நீண்டகால நிலைபேற்றிற்காகச் செய்யப்படுவன" எனும் இந்தக் கூற்றுக்கு மாதிரியாக செயற்பட்ட ஆட்சியாளர்,

(1) கவந்திஸ்ஸ மன்னன்
(2) துட்டகெமுனு மன்னன்
(3) ஸத்தாதிஸ்ஸ மன்னன்
(4) மகா பராக்கிரமபாகு மன்னன்

**40.** இலங்கையில் சமயம் சார்பான புராதன கட்டிடங்களின் படிக்கட்டுகளின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் அரைவட்ட வடிவமான இவ் அமைப்பு எவ்வாறு கூறப்படுகின்றது?

(1) கொரவக்கல
(2) முரகல
(3) வாமன ரூப
(4) சந்தகட பஹண (சந்திரவட்டக்கல்)

* *

[பக். 5 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

0230



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

## பௌத்தம் II

※ **முதலாம்** வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
※ முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகளும் வழங்கப்படும்.

**1.** (i) புத்தரின் முதலாவது போதனை என அழைக்கப்படும் சூத்திரத்தின் பெயர் யாது?

(ii) பௌத்தம் போதிக்கும் பிரதான **இரண்டு** பாவனா (தியான) முறைகள் யாவை?

(iii) “யொ தம்மம் பஸ்ஸதி ஸொ படிச்சஸமுப்பாதங் பஸ்ஸதி” இந்த அடியின் கருத்து யாது?

(iv) **நான்கு** பம்ப விஹாரணவை எழுதுக.

(v) “நஹி வெரென வெரானி - ஸம்மந்தீத குதாசனங்
அவெரென ச ஸம்மந்தி - எஸதம்மொ ஸனந்தனொ” இச் செய்யுளின் கருத்தை எழுதுக.

(vi) **மூன்று** பண்புகளை (த்ரிலக்ஷண)ப் பெயரிடுக.

(vii) கோட்டை காலப் பகுதியில் ஜாதகக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட **இரண்டு** கவிதைப் படைப்புகளைப் பெயரிடுக.

(viii) பௌத்தம் சுட்டுவதற்கமைவாக உள்ளத்தை மாசுபடுத்தும் கெட்ட மூலங்கள் **மூன்றினைப்** பெயரிடுக.

(ix) அனுராதபுரக் காலத்து ஆட்சியாளரான வலகம்பா, மகாசேன ஆகிய இருவரினாலும் கட்டப்பட்ட **இரண்டு** தாதுகோபங்கள் யாவை?

(x) **நான்கு** சதிபட்டானவை எழுதுக.

**2.** (i) சித்தார்த்த இளவரசன் கண்ட **நான்கு** முன் சகுனங்கள் எவை?

(ii) துறவு பூண்டதிலிருந்து (மகா நிஷ்கிரமணத்திலிருந்து) ஞான நிலையடைந்தது வரை சித்தார்த்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த பிரதான நிகழ்வுகளை எழுதுக.

(iii) “குழந்தைப் பருவத்திலிருந்து பிறர்நலம் கருதுதல் என்பது வாழ்வில் இன்றியமையாததொரு குணமாகும்” புத்தரின் வாழ்க்கையினை ஆதாரமாகக் கொண்டு இதனை விவரிக்குக.

**3.** (i) “தன்னிலும் பார்க்க உயர்வானவர்களுடனோ அல்லது தனக்குச் சமமானவர்களுடனோ உறவாட முடியாதவிடத்து தனித்து வாழுதல் ஏற்றதானதாகும்.” இவ்வாறு நிர்ணயிக்கும் தம்மபத செய்யுளை எழுதுக.

(ii) அந்தச் செய்யுளில் சுட்டிக்காட்டப்படும் “பால” என்பது யாரைக் குறிக்கின்றது என்பதை விளக்குக.

(iii) வாழ்வினை அர்த்தமுடையதாக்கிக் கொள்வது தொடர்பில் தம்மபதத்திலிருந்து உங்களுக்கு கிடைக்கும் அறிவுரைகளை மதிப்பிடுக.

**4.** (i) சீரிய உண்மைகள் **நான்கினையும்** பெயரிடுக.

(ii) “ஸம்மா வாசா” என்பதனை தம்ம அடிப்படையில் விளக்குக.

(iii) “மத்யம ப்ரதிபதாவ” வாழ்க்கைக் காலத்திலேயே சந்தோஷத்தை அடைவிக்கும் ஒரு மார்க்கமாகும் என்பதாகச் சுட்டிக் காட்டுக.

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**5.** (i) இலங்கையில் பௌத்த பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சேர். கென்றி ஸ்ரீல் ஒல்கொட் என்பவர் மேற்கொண்ட முயற்சிகளை அடையாளப்படுத்துக.

(ii) டேவிட் ஹேவாவிதாரண இளைஞர் அனகாரிக தர்மபாலவான வகையினை எடுத்துக் காட்டுக.

(iii) மானசிக அடிமைத்தனம் எனப்படும் இருளில் மூழ்கிக்கிடந்த சிங்கள பௌத்தர்களுக்கு ஒளி வழங்கும் ஒளித்தம்பமாக சிறிமத் அனகாரிக தர்மபாலவை அடையாளப்படுத்த முடியும்" இக்கூற்றினை விளக்குக.

**6.** (i) மூன்றாவது பௌத்த மகாசபையைக் கூட்டுவதற்கான காரணங்கள் யாவை?

(ii) மூன்றாவது பௌத்த மகாசபை சம்பந்தமாக பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

- ❊ மகாசபைக்காக முதன்மைப்பட்டு செயற்பட்ட அருகதர் யாவர்?
- ❊ மகாசபை நடாத்த உதவிய ஆட்சியாளர் யாவர்?
- ❊ மகாசபை இடம்பெற்ற இடத்தினைப் பெயரிடுக.

(iii) தேரவாத பௌத்தத்தை அன்னிய தேசங்களில் பரப்புவதற்கு மூன்றாவது பௌத்த மகாசபை உதவிய விதத்தினை விபரிக்குக.

**7.** (i) புத்த சிலைகளை அவற்றின் நிலைகளின் அடிப்படையில் பிரித்துக் காட்டும் **மூன்று** வர்க்கங்களைப் பெயரிடுக.

(ii) புத்த சிலை அமைப்பு ஆரம்பித்த வகையினையும் அது வளர்ச்சி பெற்ற வகையினையும் பற்றி கருத்துரை தருக.

(iii) புத்தரின் ஆன்மீகப் பண்புகள் வெளிப்படும் வகையில் இலங்கை கலைஞர்கள் புத்த சிலையை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள வகையினை உதாரணங்களுடன் விபரிக்குக.

❊ ❊ ❊

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk